**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

EA.No.6/2025 In Ep.No.2/2023 In OS.No.89/2020

தேதி- 11.11.2025

(P.W.1) - தசல்

குறுக்கு விசாரணை

1. என் சத்திய பிரமான வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை வழக்கறிஞருக்கு யார் சொல்லிக்கொடுத்தார்கள் என்றால் நான் தான் சொல்லிக்கொடுத்தேன். என் என்ன படித்து உள்ளேன் என்றால் ITI படித்துள்ளேன். என் அப்பாவிற்கு வட்டிக்கு கடன் கொடுக்கும் பழக்கம் உண்டா என்றால் சில நபர்களுக்கு கொடுத்துள்ளார். இம்மனுவின் எதிர்மனுதாரான ஸ்ரீதேவிக்கும், என் அப்பாவிற்கும் கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் இல்லை. என் அப்பாவிற்கு, ஸ்ரீதேவிக்கும் இடையே தாவா சொத்து சம்மந்தாமாக ஏற்கனவே ஒரு கிரைய ஒப்பந்த ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். 06.04.2018-ல் என் அப்பாவிற்கும், எதிர்மனுதாரான ஸ்ரீதேவிக்கும் இடையே கிரைய ஒப்பந்தம் தான் மேற்சொன்ன 06.04.2018-ல் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஒப்பந்தம் என்றால் சரிதான். மேற்சொன்ன கிரைய ஒப்பந்தம் ஏ.மா.சா.ஆ.1 ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது. மேற்சொன்ன கிரைய ஒப்பந்தத்தை 28.03.2019 ல் ரத்து செய்துகொண்டார்கள் என்றால் சரிதான். அதிகமாக பணம் கேட்டதால் ரத்து செய்யப்பட்டது. தற்போது காண்பிக்கப்படும் ரத்து பத்திரம் தான் மேற்சொன்ன ரத்து பத்திரம் என்றால் சரிதான்.

2. மேற்சொன்ன ரத்து பத்திரம் ஏ.மா.சா.ஆ. 2 ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது. ஏ.மா.சா.ஆ.1 ஆவணத்தில் கிரைய தொகையாக ரூ. 1,50,000/- லட்சம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிரைய ஒபபந்ததை ரத்து செய்த அதே தேதியான 28.03.2019 தேதியில் மீண்டும் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். இந்த கிரைய ஒப்பந்தத்திலும் ரூ.1,60,000/- என்று கிரைய தொகை பேசி அன்றேய தினமே ரூ.1 லட்சம் முன்பணமாக செலுத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்னவாறு கிரைய ஒப்பந்தமே கிடையாது என்றாலும் என் அப்பா வட்டிக்கு பணம் கொடுத்துவிட்டு அதற்கு ஈடாக எழுதி வாங்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. மனு பட்டிகை சொத்து 1 சென்ட் ரூ.12000/-க்கு விலைக்கு போகும் என்றால் சரிதான். உண்மையிலேயே கடனுக்காக எழுதிக வாங்கப்பட்ட கிரைய ஒப்பந்தம் என்பதால் தான் மார்க்கெட் விலையில் குறைவான விலையில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த

எதிர்க்கோரிக்கை மனுவில் 2-ஆம் எதிர்மனுதாரருக்கு அனுப்பட்ட அழைப்பானையை பெற்றுக் கொண்டு என்னை இந்த வழக்கில் காப்பாற்ற வேண்டும் என்பதால் தான் இந்நீதிமன்றத்தில ஆஜர் ஆகவில்லை என்றால் சரியல்ல. 28.10.2017-ல் 2-ஆம் எதிர்மனுதாரர் 1-ஆம் எதிர்மனுதாரிடம் ரூ.1 லட்சம் கடனாக பெற்ற விவரம் தெரியுமா என்றால் அதுபற்றி தெரியாது. 1-ஆம் எதிர்மனுதாரரை எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது.

3. மேற்சொன்ன 1-ஆம் எதிர்மனுதாரர் 28.10.2017-ல் கடன் பெற்றது சம்மந்தமாக இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.89/2020 என்ற வழக்கை தாக்கல் செய்து அது 1-ஆம் எதிர்மனுதாருக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. பட்டிகை சொத்தில் உள்ள தென்னை மரத்தில் நோட்டீஸ் ஒட்டப்பட்டது அதன் அடிப்படையில் தெரியும். 1-ஆம் எதிர்மனுதாரர் முறையாக நீதிமன்றத்தின் மூலம் உத்தரவு பெற்று அதன் அடிப்படையில் உத்தரவுயிடப்பட்ட தொகையை பெற தகுதியுடையவர் என்றாலும் அதை தடுக்க எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. மனு பட்டிகை சொத்தில் எனக்கு இதுவரை எந்த உரிமையும் கிடைக்கவில்லை என்றால் சரியல்ல. மாண்புமிகு சார்பு நீதிமன்றம் பத்மனாபபுரத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. மேற்சொன்ன வழக்கு அசல் வழக்கு எண்.75/2020 என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கு அசல் வழக்கு எண்.75/2020 வழக்கில் எதிர் உரையில் என் அப்பா வட்டிக்காக தான் பணம் கொடுத்தார் என்றாலும் கிரைய ஒப்பந்தத்திகாக பணம் கொடுக்கவில்லை என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4. மேற்சொன்ன வழக்கு அசல் வழக்கு எண்.75/2020 தீர்ப்பு வழங்கப்படாமல் இருக்கும் சமயத்தில் இந்தமனுவை தாக்கல் செய்ய எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 1-ஆம் எதிர்மனுதாரர் 2-ஆம் எதிர்மனுதாரருடன் ஒரு கூட்டு சேர்ந்து 27.10.2017 -ல் ஒரு கடன் உறுதி சீட்டு எழுதியதாக சொல்லப்பட்டது உண்மைக்கு புறம்பானது என்றாலும் அவ்வாறு எந்த ஆவணமும் ஏற்படுத்தவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த எதிர்க்கோரிக்கை மனுதள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் எனக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.